


இந்தோ-பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணத்தை மியாட் மருத்துவமனையில் திரைப்பட இயக்குனர் ராஜீவ் மேனன் தொடங்கி வைத்தார்.

## மியாட் மருத்துவமனையில்

# புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணம் தொடக்கம்

சென்னை, ஆக. 12: இந்தோ-பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் (ஐபிஎச்ஐ) சார்பில் 'புற்றுநோய் விழிப்புணர்வு நடைபயணம்' தொடக்க விழா மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் நேற்று காலை நடந்தது. நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ், பிரிட்டிஷ் துணை தூதர் மைக் நித்தவ்ரியநசிஸ் தலைமை தாங்கினர். இணை நிர்வாக இயக்குனர் ப்ரித்வீ மோகன்தாஸ் முன்னிலை வகித்தார்.

சிறப்பு விருந்தினர் திரைப்பட இயக்குனர் ராஜீவ் மேனன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். டாக்டர்கள், புகைப்பட கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இணை நிர்வாக இயக்குனர் ப்ரித்வீ மோகன்தாஸ் பேசியதாவது:

புற்றுநோயால் மக்கள் பாதிக்கப்படுவது அதிகரித்து வருகிறது. சரியான நேரத்தில் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தால், புற்றுநோயை குணப்படுத்தலாம். நடைபயணத்தில் செல்லும் புகைப்பட கலைஞர்கள், சாலை, தெருக்களில் அக்கறை, ஆறுதல் மற்றும் நம்பிக்கையூட்டும் நிகழ்வுகளை படம் பிடிப்பார்கள். இவற்றில் சிறந்த 35 படைப்புகளை ராஜீவ் மேனன் தேர்ந்தெடுப்பார்.

இந்த படைப்புகள் 6, 7, 8ம் தேதியில் நடைபெற உள்ள கண்காட்சி, விற்பனையில் வைக்கப்படும்.

இந்த 35 படைப்புகள் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வுடன் கூடிய வாசகம் அடங்கிய டீ-சர்ட்கள் விற்பனையில் கிடைக்கும் பணம் மகேஷ் அறக்கட்டளைக்கு வழங்கப்படும். நடைபயணத்தின் மூலம் ₹10 லட்சம் நிதி திரட்டி மகேஷ் அறக்கட்டளைக்கு வழங்க ஐபிஎச்ஐ இலக்காக கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.